[திரு. ப. உ. சண்முகம்] [1986 நவம்பர் 25

அளிக்கப்பட்டு, வாரியம் நிர்ணயித்துள்ள வரைமுறைகளை திருப்தி செய்ய தேவையான கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையத்தை குறிப்பிட்ட காலத்திற்குள் நிறுவுமாறு வற்புறுத்தப்பட்டுள்ளன. வாரியத்தின் அனுமதியைப் பெற்ற பிறகு 8 தொழிற்சாலைகள் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவியுள்ளனர். 11 தொழிற்சாலைகளின் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை ஏற்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. மீதமுள்ள தொழிற்சாலைகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை ஏற்படுத்தும் பணி உடனேயே மேற்கொள்ளுமாறு வலியுறுத்தப்பட்டு வருகின்றது. 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 26-வது பிரிவின் கீழ் 31–5–1984-க்குள் அனுமதி கோரி விண்ணப்பிக்காததற்காக திருப்பூரிலுள்ள 7 தொழிற்சாலைகள் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இப்பொருள் குறித்து கண்காணித்து வருகிறது.

(ஏ) கோவை நகரின் வடக்குப் பகுதியில் நில ஆர்ஜித நடவடிக்கையால் பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மா. சின்னராசு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ் வினைக் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கையை வைக்கிறேன்.

அறிக்கை.

கோவை நகரம் தொழிற்சாலைகள் நிறைந்த நகரமாக உள்ளதால் வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப வீட்டு வசதி செய்து கொடுக்கப்பட வேண்டியுள்ளதால், வீட்டு வசதி வாரியத்தின் மூலம் குறைந்த/நடுத்தர வருவாய் பிரிவினரின் வீட்டு வசதி தேவைகள் பூர்த்தி செய்யும் நோக்குடன், கோயம்புத்தூர் மாவட்டத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் அறிஞர் அண்ணா புறநகர்த் (வீட்டு வசதி) திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டுவதற்காக கீழ்க்கண்ட கிராமங்களில் உள்ள சுமார் 1,120.66 ஏக்கர் புஞ்சை நிலங்களை கையகப்

படுத்த தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தீர்மான எண் 370, நாள் 9-8-1974-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு நிலமெடுப்பு நடவடிக்கைகள் தொடரப்பட்டன.

	ஏ. செ.
1. கவுண்டம்பாளையம் கிராமம்	174.86
2. தெலுங்குபாளையம் கிராமம்	120.07
3. வடவள்ளி கிராமம்	214.43
4. வீரகேரளம் மற்றும் வேடப்பட்டி கிராமங்கள்	611.30
	1,120.66

2. மேற்கண்ட கிராமங்களில் சுமார் 1,072.70 ஏக்கர் புஞ்சை நிலங்களை கையகப்படுத்த நிலமெடுப்பு சட்டம் பிரிவு 4(1)-ன் கீழ் வரைவு அறிவிக்கைக்கு ஒப்புதல் அளித்து அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் நிலமெடுப்புச் சட்டம் பிரிவு 6 மற்றும் 7-ன் கீழான அறிவிக்கைகளுக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டு 8 நேர்வுகளில் தீர்ப்பாணை வழங்கப்பட்டு விட்டன. தீர்ப்பாணைகள் வழங்கப்பட்டவைகளில் சுமார் 39.29 ஏக்கர் நிலம் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டு விட்டது. இந்த ஆர்ஜிதத்தில் நஞ்சை நிலங்கள் எதுவும் உட்படுத்தப்படவில்லை. வருவாய் குறிப்புகளின்படி அனைத்து நிலங்களும் புஞ்சை நிலங்களே. சில நிலங்களில் மட்டும் கிணற்றுப் பாசனம் மூலம் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது.

பிரிவு 4 (1)-ன் கீழ் அறிவிக்கைகள் வெளியிடும்போது இந்நிலங்களில் குறைந்த அளவே வீடுகள் கட்டப்பட்டிருந்தன. ஏனைய வீடுகள் 4(1) அறிவிக்கை வெளியிட்ட பின்னரே கட்டப்பட்டுள்ளன. மேற்கண்ட நிலங்கள் நில ஆர்ஜிதத்திற்கு உட்படுத்தப்படுகிறது என்பது நில உரிமையாளருக்குத் தெரிந்த பின்னர் மேற்கண்ட நிலங்கள் மனை பிரிவு செய்யப்பட்டு தனியார்களுக்கு விற்கப்பட்டுள்ளது. இந்நிலங்களில் சுமார் 100 ஏக்கர் அளவு நிலங்களே மனைப்பிரிவுகள் செய்யப்பட்டுள்ளன. வரைபட அனுமதி பெற்றவர்களும் காலியிடத்தின் உரிமையாளர்களும் இந்நிலமெடுப்பிற்கு எதிராக பல்வேறு வழக்குகளை உயர் நீதி மன்றத்தில் தொடர்ந்து தடைஉத்தரவும் பெற்றுள்ளனர். ஆகவே, இந்நிலமெடுப்பு நடவடிக்கைகள் நடைபெற்றுள்ளது. இதுவரை எந்தக் கட்டிடமும் இடிக்கப்படவில்லை, இத்திட்டம் நிறைவேற்றப்படும்போது மனைச் சொந்தக்காரர்களுக்கு மனை ஒதுக்கீட்டில் முன்னுரிமை அளித்து அவர்களுக்கு மனை ஒதுக்கீடு செய்யலாமா என்பது பற்றி பரிசிலீக்கப்படும். (குறுக்கீடுகள்) (கூச்சல்) குழப்பம்.

திரு. கு. சுப்பராயன்: எதிர்க்கட்சி வரிசையில் உள்ளவர்களுக்கு உரிமை கிடையாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மக்கள் பிரச்னை குறித்து அமைச்சரின் கவனத்தை ஈர்ப்பதைத் தடுப்பதே குற்றம்.

அடுத்த கவன ஈர்ப்பு.

(ஐ) சிட்கோ தொழிலாளர்களுக்கு குடியிருப்புகளை உடமையாக்குதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் பொன்முத்துராமலிங்கம், கே. சொர்ணலிங்கம், துரை கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புக் கொடுத்துள்ளனர். மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தொழிலாளர் மலிவு வாடகை வீட்டு வசதித் திட்டம், மத்திய அரசின் நிதி உதவியுடன் செயற்படுத்தப்பட்டு வந்தது. மத்திய அரசு, இத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகளுக்கு கடன் மற்றும் மானியத் தொகையை 1969-ம் ஆண்டு வரை தனிப்பட்ட முறையில் வழங்கி வந்தது. அதன் பின்னர், 1-4-1969-க்குப் பின்னர், இத்திட்டத்திற்கு மாநிலங்களின் வருடாந்திர திட்டத்தின் கீழ் (State Annual Plan) நிதியினை மைய அரசு அளித்தது.

(2) தொழிலாளர் மலிவு வாடகை வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், இம்மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில், தனியார் துறை, பொதுத்துறை, கூட்டுறவுத்துறையின்கீழ் கீழ்க்கண்ட எண்ணிக்கையுள்ள வீடுகள் இதுவரை கட்டப்பட்டுள்ளன:—

(1)	தனியார் துறை ..	1,206
(2)	வீட்டு வசதி வாரியத்தால் பராமரிக்கப்படுபவை ..	3,046
(3)	'சிட்கோ' நிறுவனத்தால் பராமரிக்கப்படுபவை ..	1,111
(4)	கூட்டுறவுத் துறை	2,459

(3) இத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகள் தொழிலாளர்களுக்கு வாடகை முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டன. தொழிலாளர்கள் ஓய்வு பெறும்பொழுது அல்லது அவர்களது வருமான வரம்பு மாதம் ரூ. 500க்கு மேல் உயரும்பொழுது, தொழிலாளர்கள் தமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட விடுகளை காலி செய்ய வேண்டும். ஆனால், நடைமுறையில் இதை பின்பற்ற இயலவில்லை. தற்பொழுது, மிக அதிக எண்ணிக்கையில், ஓய்வு பெற்ற மற்றும் வருமான உயர்வு பெற்ற தொழிலாளர்கள்